# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம் 26-09-2025 வெள்ளிக்கிழமை மாலை 4.30** மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியில் வருடத்திற்கு ரூ.10 கோடிக்கும் அதிகமான வருவாய் உள்ளதால் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி தர தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1503 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 1

கன்னியாகுமரி மாவட்ட கூடட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.4381/MKG/2022, நாள் 08-08-2025-ல் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கிருஷ்ணன் நாயர் வணிகவளாக முன்பக்கத்தில் காலியாக உள்ள இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட 10'x10' அளவில் இடம் ஒதுக்கீடு செய்ய வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க இந்நகராட்சி வருவாய் ஆய்வாளரின் அறிக்கையின்படி நகரபுல எண்.A6/214-ல் காலியாக உள்ள 10'x10' = 100 சதுரஅடி இடத்தினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதி எண்.316/3-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நிலத்தின் வழிகாட்டி மதிப்பின் 3% தொகையினை வாடகையாக விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி புல எண்.A6/214-ன் வழிகாட்டுதல் மதிப்பு சதுர அடிக்கு ரூ.690/- ஆகும். 100 சதுர அடிக்கு ரூ.69000/- இதில் 3% ரூ.2070/- எனவே கிருஷ்ணன்நாயர் வணிகவளாகம் முன்பக்கம் காலியாக உள்ள 100 சதுர அடி இடத்திற்கு மாதவாடகையாக ரூ.2070/- +18% சரக்கு மற்றும் சேவை வரி நிர்ணயம் செய்து நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023-க்கு உட்பட்டு கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் நாகர்கோவில்-3-க்கு ஆவின் பாலகம் அமைத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**2588/2025/எப்1.

மன்றத்தீர்மான எண்.1504 நிராகரிக்கப்பட்டது.

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாகத்தின் தென்மேற்கு பகுதியான தேங்காய் பட்டணம் சாலையை ஒட்டிய பகுதியில் 8’x10’ = 80 சதுரஅடி இடம் காலியாக உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமலும் அருகமையிலுள்ள கடைக்கு எந்தவித இடையூறு இல்லாமல் மேற்படி இடத்தில் 80 சதுரஅடியில் தற்காலிக கடை அமைத்து நடத்தும் உரிமத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1079/2025/அ2

மன்றத்தீர்மான எண்.1505 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி அலுவலக வளாகத்தில் முறிந்து கிடக்கும் மரக்கிளைகளை எடுத்து செல்லும் வேலைக்கு 15-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | சி. ராஜன், திற்பிலாங்காடு | 530 |
| 2 | சி. சுந்தர், கண்ணக்கோடு | 500 |
| 3 | ற்றி. நெல்சன்ராஜ் | 510 |

மேல் தெரிவிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் கூடுதல் விலைப்புள்ளி தெரிவித்துள்ள திரு.சி. ராஜன் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிவழங்கலாம்.
**ந.க.எண்.**3039/2025/அ2

மன்றத்தீர்மான எண்.1506 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தின் அழகுபடுத்தும் விதமாக விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் ஒவியங்கள் வரைவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட

கூட்டங்களிலும் நேரடியாகவும் தெரிவித்தன் படியும் முதல் கட்டமாக மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் பணி மேற்கொள்வதற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | M/S. Ramesh Arts, Kulasekaram | 1,80,000/- |
| 2 | M/S. Ranjith Arts | 1,60,000/- |
| 3 | Rajkumar Arts and Craft | 1,75,000/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக M/S. Ranjith Arts என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு CSR நிதியின்கீழ் தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1983/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1507 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை கடைகளுக்கான முன்கூட்டிய ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் வாயிலாக அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பத்திரிக்கை பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினத்தந்தி | 62025/- |
| 2 | தினகரன் | 27342/- |

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2316/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1508 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய தினசரி சந்தையில் அமைந்துள்ள கடைகளுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1440, நாள் 21-08-2025-ன்படி அனுமதி பெறப்பட்டு ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதில் கீழ்கண்ட கடைகளுக்கான ஏல திருத்த அறிவிப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | கடையின் விபரம் | சதுர அடி | வைப்புத்தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 36 (உணவகம்) | 356 | 3,00,000 |
| 2 | 57 ( இறைச்சிகடை) | 356 | 3,00,000 |
| 3 | 64 (இறைச்சிகடை) | 263 | 3,00,000 |

மேற்கண்ட கடைகளின் 57, 64 தலா மூன்று கடைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண் | வைப்புத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | 36 (கடை) | 5,00,000 |
| 2 | 57 (இறைச்சி கடை) | 2,00,000 |
| 3 | 57 A (இறைச்சி கடை) | 2,00,000 |
| 4 | 57 B (இறைச்சி கடை) | 2,00,000 |
| 5 | 64 (இறைச்சி கடை) | 2,00,000 |
| 6 | 64 A (இறைச்சி கடை) | 2,00,000 |

எனவே வரிசை எண்.1 முதல் 6 வரையுள்ள கடைகளுக்கு வைப்புத்தொகை மாறு நிர்ணயம் செய்திடவும் திருத்திய ஏல அறிவிப்பு வெளியிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு - மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2316/2025/அ2,

மன்றத்தீர்மான எண்.1509 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் கொல்லக்குளம் முதல் வடக்குதெரு சாலையில் (Unicode No,149014R069) Transformer முதல் Cross Street வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.40 இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1359, நாள்: 26-06-2025 அன்று மன்ற அனுமதி பெறப்பட்டு 22-08-2025-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. தேவதாஸ் | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.T. அமிர்தராஜ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரித்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T. அமிர்தராஜ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1795/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1510 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.1-ல் அம்ரூத் 2.0 2022-2023 திட்டத்தின்கீழ் காட்டுவிளை பூங்கா பணி அமைக்கப்பட்டது. காட்டுவிளை பூங்கா செல்லும் பாதை கரடு முரடாகவும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாமல் உள்ளதாலும் ஏற்கனவே ஒரு கட்டமாக 145M-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 75M-க்கும் சாலை அமைத்து பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி உள்ளதால் இப்பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.20 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2906/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1511 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சி சொந்தமான மார்த்தாண்டம் புதிய தினசரி சந்தையில் அமைந்துள்ள ஆண் மற்றும் பெண் கழிப்பிடங்களுக்கு ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரிட ஏதுவாக வைப்புத்தொகை ரூ.1.00 இலட்சம் நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**2316/2025/அ2

மன்றத்தீர்மான எண்.1512 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சியில் மாதந்தோறும் நடத்தப்படும் நகர்மன்ற கூட்டம் 26-06-2025 அன்று நடைபெற்ற கூட்டத்திற்கான தீர்மான நகல்கள் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தீர்மான நகல் வழங்கிட அலுவலகத்தில் உள்ள ஜெராக்ஸ் மிஷின் பழுதடைந்துள்ளதால் தீர்மான நகல் அனைத்தும் ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட செலவீனம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.1350/-யினை திரு.ச. வெங்கடேஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் செலவினம் செய்யப்பட்டு பில்தொகை வரப்பெற்றது. எனவே மேற்படி செலவினம் செய்யப்பட்ட தொகை ரூ.1350/-யினை திரு.ச. வெங்கடேஷ், இளநிலை உதவியாளர் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2023/எச்1

மன்றத்தீர்மான எண்.1513 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவில் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமிற்கு அடிக்கப்பட்ட Flex Banner மற்றும் சுயவிவரக்குறிப்பு முகாம் (திடக்கழிவு - Solid Waste)-க்காக அடிக்கப்பட்ட Flex Banner, நலன் காக்கும் ஸ்டாலின் முகாமிற்கு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட Bit Notice-க்கான செலவினம் செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பட்டடியல் கீழ்கண்டவாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | SHINE DIGITAL Flex Banner (2 nos) | 1900/- |
| 2 | RETHNA PAPER STORE (5000 nos) | 2000/- |
| | மொத்தம் | 3,900/- |

எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு மேற்படி பில் தொகையினை ரூ.3,900/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2023/எச்1.

மன்றத்தீர்மான எண்.1514 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் கழிவு சேகரிப்பு இயக்க தினத்திற்கு Flex Banner செலவீனம் ரூ.300/- நம்ம டாய்லெட் பகுதிகளில் செடிகள் வைப்பதற்கான பிளாஸ்டிக் ஓஸ் தண்ணீர் விடுவதற்கான ஓஸ் செலவினம் ரூ.550/- மற்றும 100-வது வாவுபலி பொருட்காட்சி திடலில் கபடி வீரர்களுக்கு மதிப்பெண் பெற்ற மதிப்பீடு அட்டை ஜெராக்ஸ் எடுத்த செலவீனம் ரூ.950/- ஆகமொத்தம் ரூ.1800-யினை திரு. ராதாகிருஷ்ணன் என்பவரால் செலவினம் செய்யப்பட்டு பில் தொகை வரப் பெற்றது. எனவே மேற்படி தொகை ரூ.1800/-யினை திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2023/எச்1.

மன்றத்தீர்மான எண்.1515 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் படியன்விளை சாலை முதல் ஆற்றிற்கு செல்லும் சாலை வரை கான்கிரீட் சவாலை அமைக்கும் பணிக்கு ரூ.9.60 இலட்சத்திற்கு மதிப்பீட்டிற்கு பணி மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.1428, நாள்: 21-08-2025-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு 25-09-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.T. ராஜன் | 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி.P. சரோஜா | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரித்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.P. சரோஜா ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2568/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1516 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் தலைமை தபால் நிலையம் முன்புறம் பராமரிப்பு பணி மற்றும் Handrail அமைப்பதற்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.1432, நாள் 21-08-2025-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு 25-09-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.T. ராஜன் | 1.96% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி.P. சரோஜா | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள திருமதி.P. சரோஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2565/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1517 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கொடுங்குளம் சாலையில் கோடியவிளை கிளை சாலையின் மழைநீர் வடிகால் பழுதடைந்து உள்ளதை சரி செய்யவும் மற்றும் புதுக்குளம் சாலைக்கு செல்லும் சிறுபாலம் பழுதடைந்து மழைநீர் செல்ல முடியாமல் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மழைநீர் வடிகாலையும் சிறுபாலத்தையும் சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்ப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2566/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1518 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி..